1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்பட்டோர் நலக்குழு, கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கிற இந்த சமூக மக்களை ஆய்வு செய்தபோது, கல்வி மற்றும் சமூக நிலையில் அவர்கள் பின்தங்கியவர்களாக இல்லை என்பதைத் தெரிவித்திருந்தது. ஆகவே, அதுகுறித்து பரிந்துரை செய்யவில்லை. இந்த நிலைமைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பதைக் கண்டு நமது சமூகநீதியின் காவலராகவும் ஏழை எளிய மக்களின், பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர், சிறுபான்மை இன மக்களின் காவல் தெய்வமாக விளங்குகிற நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மூன்றாவது பிற்பட்டோர் நலக்குழுவை அமைக்க ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுப்ரீம்கோர்ட் அளித்த தீர்ப்பின்படி ஒரு நிரந்தர ஆணையம் அமைக்கவேண்டுமென்ற கருத்தினை ஏற்று நமது போற்றுதலுக்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நிரந்தர ஆணையத்தை ஏற்படுத்துவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

100 --

அருந்ததிய இனத்தவருக்கு ஊராட்சி மையங்களில் காலணி தயாரிக்கும் தொழிற்கூடம் அமைத்தல்.

* 10503-**திரு எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அருந்ததிய இனத்தவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் பெரும் பகுதியாக அவர்கள் வாழும் ஊராட்சி மையங்கள்தோறும் காலணி தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு எம். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, துப்புறவுப் பணிகளில் வேலை வாய்ப்பு கொடுக்கமுடியாத அருந்ததியர் சமூகத்தினருக்கு, நகராட்சிகளில் காலணி தயாரிக்கும் மையங்கள் அமைத்துக் கொடுப்பதுபோல், ஊராட்சி மையங்களிலும் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை பற்றாக்குறை காரணமாக அருந்ததியர் இனத்தவர் வாழும் ஊராட்சி மையங்கள் தோறும் காலணி தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க இயலாத நிலை உள்ளது.

திரு. எம். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமங்களில் நவீன கழிப்பிடங்கள் அமைத்துத் தருவது போல, வேலை வாய்ப்பின்றி இருக்கும் அருந்ததியருக்கும் மாற்றுத் தொழில் வழங்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதற்கு தனிக் கேள்வி போட்டால் உரிய பதிலை வழங்கமுடியும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எம். துரை.

திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் ஊராட்சி மையங்கள், காலணி தயாரிக்கும்

1993 மார்ச் 16]

தொழிற்கூடங்களை மூடிவிட்டுள்ளன. அதில் வேலை செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. எனவே, மூடிய தொழிற் கூடங்களைத் திறக்கவும், அங்கே வேலை செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி வளர்ச்சிக்காக பெரம்பூரிலும். பல்லாவரத்திலும் இரண்டு தோல் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அதேபோல தமிழகத்தில் சென்னை மண்டலம், கோவை மண்டலம் மற்றும் மதுரை மண்டலம் ஆகியவற்றில் 10 தோல் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. உற்பத்தி நிலையங்கள் எவையும் மூடப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குறுகியகால வினா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1--

தமிழகத்தில் வசூலிக்கப்படும் பேருந்துக் கட்டணம்

* *19409*–**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில்தான் அதிகமான கட்டணம் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் வசூலிக்கப்படுகின்றதா?